# CURRENT AFFAIRS TOPICS FOR RAPID REVISION TEST V

1. **Tamil Nadu Health System Reform Programme**
   தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம்

2. **Mathi Scheme**
   மகளிர் திட்டம்

3. **Tamil Nadu Planning Commission**
   தமிழ்நாடு திட்டக்குழு

4. **NHM in Tamil Nadu**
   தேசிய நலவாழ்வுக் குழுமம் - தமிழ்நாடு

5. **Tamilnadu e-vehicle policy 2019**
   தமிழ்நாடு மின்சார வாகனக்கொள்கை 2019

6. **Tamilnadu Forest Policy 2018**
   தமிழ்நாடு வனக்கொள்கை 2018

7. **Government of India's and Tamil Nadu's Schemes for Pregnant and lactating mothers**
   கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான இந்திய மற்றும் தமிழக அரசின் நலத்திட்டங்கள்

8. **Ayushman Bharat Health Infrastructure Mission (ABHIM)**
   ஆயுஸ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கம்

9. **AMRUT 2.0**
   தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0 மற்றும் அம்ருத் 2.0

10. **DAY – NRLM**
    தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம்

11. **Government of India Scheme – Development of Women and Children**
    இந்திய அரசு திட்டம் - பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

# 1. தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம்

தமிழ்நாடு அரசு தமிழக மக்களின் சுகாதார தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு உலக வங்கியின் துணையுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. உலக வங்கி இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டிய நிதியினை நல்க ஒப்புக்கொண்டு 19.03.2019 அன்று சுகாதார சீரமைப்பு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது. புது டெல்லியில் தமிழக அரசின் சார்பில் தமிழக சுகாதார துறை செயலர் மற்றும் சுகாதார திட்ட இயக்குநர் மற்றும் உலக வங்கி இயக்குநர் அவர்களும் கடன் உதவி ஒப்பந்தத்தில் 04.06.2019 அன்று கையெழுத்திட்டனர்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு இந்திய ரூபாய் மதிப்பில் 2857.003 கோடிகள் (அமெரிக்க டாலரில் 410 மில்லியன்). இத்திட்டத்திற்கான உலக வங்கியின் பங்கு இந்திய ரூபாய் மதிப்பில் 1999.902 கோடிகள் (அமெரிக்க டாலரில் 287மில்லியன்கள்), தமிழ்நாடு அரசு 857.101 கோடிகள் (அமெரிக்கா டாலரின் 123 மில்லியன்கள்) கூடுதலாக முதலீடு செய்ய உள்ளது. இத்திட்டம் உலக சுகாதார அமைப்பின் திட்டமான நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) (அனைவருக்கும், அனைத்து வயதினருக்குமான சுகாதார திட்டம்) எட்டும் குறிக்கோளுடன் 5 வருடங்களுக்கு செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் மேம்படுத்தப்பட்ட தரமான சிகிச்சை, தொற்றாநோய்கள் மற்றும் காயங்களுக்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை, பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில் காணப்படும் குறைப்பாடுகளை நீக்குதல் ஆகியன ஆகும்.

**திட்ட மேம்பாட்டு குறிக்கோள் குறிக்காட்டிகள்**

1. தர சான்றிதழ் (ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மற்றும் மூன்றாம் நிலை) பராமரிப்பு உடன் கூடிய பொது மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
2. ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மற்றும் மூன்றாம் நிலை வசதிகளுக்கான தர மதிப்பெண்களை அதிகரித்தல்.
3. கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய்களுக்கான பொதுத் துறை வசதிகளில் நோய்கண்டறிதல் திறன்களை அதிகரித்தல்.
4. உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த சர்க்கரை கட்டுப்பாட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
5. விபத்து மற்றும் காயம் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துதல்
6. முன்னுரிமை மாவட்டங்களில் மகப்பேறு மற்றும் குழந்தை சுகாதார சேவைகளின் பயன்பாட்டை அதிகரித்தல்.

**இடைநிலை குறிகாட்டிகள்**

1. ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் தர மேம்பாட்டு குறியீடுகளை செயல்படுத்துதல்.
2. இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பொது மருத்துவமனைகளின் நோயாளிகளின் அனுபவ தன்மைகளை கண்ட அறிதல்.
3. புதுப்பிக்கப்பட்ட சமூக மற்றும் நடத்தை வியூகம் செயல்படுத்துதல்.
4. ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் மனநலம் குறித்து பயிற்சி பெற்ற மருத்துவர்களை அதிகரித்தல்..
5. தற்கொலை தடுப்பு அவசர உதவி எண் நிறுவுதல்..
6. நவீன ஆம்புலன்ஸ் வசதிகளை அதிகரித்தல்.
7. விபத்து மற்றும் காய பராமரிப்பு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்..
8. சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பை வலுபடுத்துதல்..
9. ஒருங்கிணைப்பு செயல்திறன் அடிப்படையிலான மேலாண்மை, கற்றல் மற்றும் பிற குறுக்கு வெட்டு செயல்பாடுகளை சிறந்த முடிவுகளுக்காக வலுப்படுத்தல்..
10. குடிமக்கள் ஈடுபாடு மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை அதிகரித்தல். .

**இத்திட்டம் மூன்று அடுக்கு கட்டமைப்புடன் கீழ்க்கண்டவாறு நிர்வகிக்கப்படுகிறது**

1. மாநில அதிகாரம் பெற்ற குழு (State Empowered Committee) - அரசு தலைமை செயலாளர் தலைமையில் செயல்படுகிறது.

2. திட்ட வழிகாட்டும் குழு - சுகாதார செயலாளர் தலைமையில் செயல்படுகிறது.

3. திட்ட மேலாண்மை குழு - திட்ட இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது.

திட்ட மேலாண்மை குழு 16.10.2019 அன்று நிறுவப்பட்டது முக்கிய பதவிகள் அனைத்தும் நிரப்பபட்டுள்ளன.

இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மற்றும் வட்ட மருத்துவமனைகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழியாக மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் 05.09.2019 அன்று பெறப்பட்டது.

இந்த திட்டத்திற்கான நிதி ஆண்டுதோறும் சுகாதாரத் துறையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தமிழக அரசு வழங்கும். துறை இயக்குநர்கள் தங்கள் வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் நிதித் துறையிடமிருந்து நேரடியாக அவர்களால் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளைப் பெறுவார்கள். சுயாதீன சரிபார்ப்பு அமைப்பின் முடிவுகள் மற்றும்

அறிக்கையின் அடிப்படையில் தமிழக சுகாதார சீர்திருத்த திட்டத்திற்கு உலக வங்கியால் நிதி வழங்கப்படும்.

**தமிழ்நாடு சுகாதார திட்டம்**

1. மக்களை தேடி மருத்துவம்
2. இன்னுயிர் காப்போம்

# 2. மகளிர் திட்டம்

**மகளிர் திட்டம் உருவாகக் காரணங்கள்**

- தமிழகத்தில் பெண்களின் நிலையில் நல்ல முன்னேற்றங்கள் இருந்தாலும், சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே இருந்தனர்.
- அரசு நலத் திட்டங்கள் பல இருந்தாலும், வறுமை நிலையை ஒழிக்க முடியாமல் இருந்தது. அரசு நலத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு, குறைவான நிலையில் இருந்தது.
- பெண்கள் மத்தியில் கல்வி, சுகாதாரம், பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது.
- நலப்பணிகளை மக்களே கேட்டு பெற்றுக் கொள்ளும் (Demand creation) உணர்வு குறைந்த அளவிலேயே இருந்தது.

**மகளிர் திட்ட வரலாறு**

தமிழகத்தில் வறுமையை ஒழிக்கவும், பொருளாதார நிலை வலுவடையவும் 1989 ஆம் ஆண்டு பன்னாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிதியகத்தின் (IFAD) நிதியுதவியுடன் தற்போதுள்ள 8 மாவட்டங்களில் (தர்மபுரி, சேலம், நாமக்கல், விழுப்புரம், கடலூர், மதுரை, தேனி மற்றும் இராமநாதபுரம் ஆகியவை (IFAD) திட்டம் செயல்படுத்தப்பட்டு வெற்றி காணப்பட்டது.

அவ்வெற்றியின் அடிப்படையில் “மகளிர்திட்டமாக” தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பின்னர் விரிவுபடுத்தப்பட்டது. 2002 ஆம் ஆண்டு முதல், நகரத்தில் வசிக்கும் ஏழைகளும் பயன்பெறும் வகையில் சென்னை மாவட்டத்திற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

**மகளிர் திட்டத்தின் குறிக்கோள்**

தமிழகத்திலுள்ள அனைத்து ஏழை மகளிரையும், சமூகரீதியாகவும், பொரருளாதார ரீதியாகவும், மேம்பாடு அடைய செய்வது, தாங்களாகவே தங்கள் வாழ்கை தரத்தை உயர்த்திக் கொள்ள செய்து ” சுய சார்பு ” நிலைய அடைய செய்வது.

**மகளிர் திட்ட நோக்கங்கள்**

ஏழை மகளிரின் சமூக மேம்பாடு, பொருளாதார மேம்பாடு, திறன் வளர்த்தல்

**சமூக மேம்பாடு**

- மகளிரிடையே தன்னம்பிக்கை மற்றும் ' நமக்கு நாமே' என்ற உணர்வினை உண்டாக்குதல்
- சாதி, சமய வேறுபாடு இல்லாமல், ஒற்றுமை, நல்லிணக்கத்தை உருவாக்குதல்
- சமூக, விழிப்புணர்வை உண்டாக்கி, சமூக பிரச்சினைகளைத் தீர்வு காண மகளிரைத் தயார் செய்தல்.
- உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரைப் பங்கேற்கச் செய்தல்.
- கிராமத்தின் அடிப்படை தேவைகளை பெற தேவையான பணிகளில் ஈடுபட செய்தல்.
- குடுப்பத்திலும், சமூகத்திலும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தி பகிர்ந்தளிக்கச் செய்தல்
- பெண்களுக்கு எதிரான இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து போராடி வெற்றி காண செய்தல்.
- மகளிரிடையே மறைந்து இருக்கும் ஆற்றல்களைக் கண்டறிந்து வெளிக் கொணர்தல்.
- சுகாதாரம், குடும்பநலம் மற்றும் ஊட்டச்சத்து போன்றவற்றில் தெளிவடையச் செய்தல்.

**பொருளாதார மேம்பாடு**

- சிக்கன நடவடிக்கை மூலம் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல்.
- அவசரக்கடன் தேவைகளை (கந்து வட்டி வாங்காமல்) சுயமாக பூர்த்தி கொள்ள செய்தல்.
- கடன் தேவைகளுக்கு (ஈட்டி) கந்து வட்டிக்காரர்களைச் சார்ந்து இருப்பதை முழுமையாக தவிர்த்தல்.
- நேரத்தை வீணாக்காமல் வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபடுத்துதல்.
- தொழில் திறன் மற்றும் விற்பனை திறன் பெற்று குடும்ப பொருளாதார நிலையை உயர்த்த வழிவகை காணுதல்.
- மகளிர் செய்த உற்பத்திப் பொருள்களை இடைத்தரகர் இன்றி விற்பனை செய்யும் வகையில் திறனை வளர்த்தல்.
- பல்வேறு அரசு நலத் திட்ட உதவிகளை பெற்று முன்னேற வழி காட்டுதல்.
- மத்திய, மாநில அரசுகளின் கடனுதவிகளைப் பெற்று பயனடைதல்.
- வாங்கிய கடனை முறையாக பயன்படுத்தி கண்ணியமாகத் திரும்ப செலுத்த கற்றுத் தருதல்.
- மகளிர் பெயரில் சொத்துகளை உருவாக்கச் செய்தல்.

**திறன் வளர்த்தல்**

- பெண்களுக்கு பேசும் திறன், எழுதும் திறன், வாசிக்கும் திறன் போன்றவற்றை வளர்த்தல்.
- தலைமைத்துவ பண்புகளை வளர்த்தல்.
- நடைமுறை வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக் கொடுத்தல்.
- தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றை கொண்டு செயல்களை முடிக்கும் திறனை மேம்படுத்துதல்.
- தகவல் தொடர்பு திறனை வளர்த்தல்.
- முடிவெடுக்கும் திறனை வளர்த்தல்.
- தொழில் திறன் பயிற்சி பெற வழிவகை செய்தல்.
- பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகளை அறிந்து, செலாக்கத்தில் ஈடுபடச் செய்தல்.
- பதிவேடுகளைப் பராமரிக்கும் திறனை வளர்த்தல்.
- குழுவாக இணைந்து சாதனைகள் புரிந்திடும் ஆற்றலை வளர்த்தல்.
- கணிணி, மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தும் திறமைகளை வளர்த்தல்.
- பல திறன்களை வளர்த்துக் கொண்டு குடும்ப / கிராம / நகர் புற மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல்.
- மகளிர்க்கு நிதி மேலாண்மையைக் கற்றுக் கொடுத்தல்.
- போன்ற மகளிர் திட்ட நோக்கங்கள், சுய உதவி குழுக்களை ஒட்டுமொத்த மேம்பாட்டை அடையச் செய்வது சுய சார்பு தன்மைக்கு இட்டுச் செல்கிறது.

# 3. தமிழ்நாடு திட்டக் குழு

வரலாறு

தமிழ்நாடு திட்டக்குழுவானது 1971, மே, 25ஆம் நாள் துவங்கப்பட்டது. 2020 ஏப்ரல் 23 அன்று அதிமுக ஆட்சியால் ஆண்டு இது *தமிழ்நாடு மாநில வளர்ச்சி கொள்கைக் குழு* என மறுசீரமைக்கப்பட்டது.[1] இக்குழுவின் தலைவராக தமிழக முதலமைச்சர் இருப்பார். இந்த மாநில திட்டக்குழுவின் துணை தலைவர் மற்றும் உறுப்பினர்களாக பொதுமக்களில் சிறந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இத்திட்டக்குழுவில் நிதித்துறை, திட்டக்குழு மற்றும் முன்னேற்றத் துறையில் முன்னால் செயலர்களும் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் உறுப்பினர்களின் செயலாளர் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பணிகளை வழிநடத்துகிறார். இந்நிலையில் 2021 இல் மு. க. ஸ்டாலினின் தலைமையிலான தமிழ்நாடு அரசு இக்குழுவின் பெயரை மீண்டும் மாநில திட்ட குழு என்று மாற்றியமைத்தது.

மு. க. ஸ்டாலின், தலைவர்

ஜெ. ஜெயரஞ்சன், துணைத் தலைவர்

திட்டக்குழு மையப்படுத்தும் துறைகள்

- வேளாண் துறை கொள்கை மற்றும் திட்டங்கள்
- தொழிற்சாலைகள் – மின்சாரம் மற்றும் போக்குவரத்துத்துறை
- நில உபயோகம்
- ஊரக மேம்பாட்டுத்துறை
- நலவாழ்வு மற்றும் சமூக நலத்துறை
- கல்வித்துறை
- மாவட்டத் திட்டக் குழு
- திட்டங்கள் ஒருங்கிணைத்தல்

*இத்திட்டக்குழு தன் பொறுப்புகளை தொழில்நுட்ப பிரிவுகளின் மூத்த அதிகாரிகள் மூலம் மாநிலத்தின் அந்தந்த முன்னேற்றத்துறைகளுக்குக் கொண்டு சேர்க்கிறது. இதன் தலைமைப் பிரிவிற்கு, திட்ட அதிகாரி தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் திட்ட உதவியாளர்களைக் கொண்ட சிறு குழு ஆதரவு கொடுக்கிறது. இச்சிறு குழுவில் உள்ளவர்கள் பொருளாதாரம், கணிதம் மற்றும் புள்ளியியல் துறைகளை சார்ந்தவர்களாவார்கள். இந்தப்பிரிவு திட்டக்குழு உறுப்பினர்களோடு இணைக்கப்பட்டு திட்டக்குழு செயல்படுவதற்கு உதவுகிறது.*

**இக்குழுவின் செயல்பாடுகள்**

*இக்குழு தொழில்நுட்ப அறிவுரைகளை அரசுக்கு வழங்குகிறது. இதன் செயல்பாடுகள் பின்வருமாறு:*

1. *தொழில்நுட்பத் துறைகளின் செயல்பாடுகளை ஆராய்கிறது*
2. *ஆண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டங்களை வகுக்கிறது*
3. *புதிய திட்டங்களை ஆராய்கிறது*
4. *மாநில நில உபயோக வாரியத்திற்கு தொழில்நுட்ப உள்ளீடுகளுக்கு ஆதரவு அளிக்கிறது*
5. *மனித மேம்பாட்டிற்கு திட்டங்கள் வகுக்கிறது*
6. *கல்வி, ஆராய்ச்சி மாநாடு மற்றும் தொழிற்சாலை மூலம் அறிவுச்சேவை செய்கிறது*

## 4. தேசிய நலவாழ்வ குழுமம் - தமிழ்நாடு

சுகாதார குறியீடுகளை அடைவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. நமது மாநிலம் ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்த இரண்டாயிரம் ஆண்டிற்கான வளர்ச்சிக்கான இலக்குகளை ஏற்கனவே அடைந்துள்ளது. அனைத்து நிலையான வளர்ச்சி இலக்குகளையும் (SDG), இலக்கு ஆண்டான 2030க்கு முன்னதாகவே அடைவதற்கு தமிழ்நாடு உறுதிபூண்டுள்ளது. நமது மாநிலம் தேசிய நலவாழ்வு குழுமத்தின் (NHM) கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் சுகாதார குறியீடுகளை விரைந்து முன்னேற்றம் அடைவதற்கு சிறந்த முறையில் பயன்படுத்தி வருகிறது. தேசிய நலவாழ்வு குழுமம் கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதார நிலை மற்றும் சுகாதார கட்டமைப்பில் முன்னேற்றம் கொண்டு வரும் நோக்கில், 2005ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பின்னர் 2013ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற நலவாழ்வு குழுமம் என்று நகர்ப்புற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

**நோக்கம்**

- ✓ மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்பைக் குறைத்தல்

- ✓ அனைத்து தரப்பினருக்கும் பொது சுகாதாரம் / மகளிர் நலம், குழந்தைகள் நலம், குடிநீர், சுகாதாரமான வாழிடம், ஊட்டச்சத்து, நோய்த்தடுப்பு மருந்துகள் ஆகியவை எளிதில் கிடைக்க செய்தல்

- ✓ தொற்று மற்றும் தொற்றா நோய்களை பரவாமல் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல்

- ✓ பாலின விகிதத்தினை மக்கள் தொகைக்கேற்ப சமன்படுத்தல்

- ✓ ஒருங்கிணைந்த மற்றும் விரிவான ஆரம்ப சுகாதார சேவைகள் கிடைக்கச் செய்தல்

- ✓ மரபு சார்ந்த உள்ளூர் மருத்துவம் மற்றும் இந்தியமுறை மருத்துவத்திற்கு புத்துயிர் அளித்தல்

- ✓ ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல்

தேசிய நலவாழ்வு குழுமம் தனது இலக்கினை அடைவதற்காக, சமுதாயத்திற்கு பொறுப்புணர்வுடன் கூடிய முழுமையான பொது சுகாதார சேவைகள் கிடைக்கச் செய்வது, சமுதாய ஈடுபாடு, மனிதவள மேலாண்மை, பரவலாக்கல், தர நிலையை அடைய தீவிரமான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு, கிராமங்கள் தொடங்கி மேல் நோக்கிய வகையில் சுகாதார திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படுத்துதல், புதிய வழிமுறைகள் கண்டறிதல், சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துவதற்கு நெகிழ்வு தன்மையுடைய நிதி உதவி மற்றும் பிற செயல்பாடுகள் ஆகியவற்றை பயன்படுத்துகிறது.

**தேசிய நலவாழ்வு குழுமத்தின் இலக்குகளை அடைவதற்கான உத்திகள்**

- ✓ அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகள் எளிதில் கிடைத்திடவும் அதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்தல்.

- ✓ ஒன்றிய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியன கூட்டாக செயல்படுவதற்கான கருவியாக செயல்படுதல்

- ✓ ஆரம்ப நிலை சுகாதார சேவைகளான நோய் தடுப்பு, ஆரோக்கிய மேம்பாடு ஆகியவற்றை எய்துவதற்கு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளையும் சமூகத்தினரையும் இணைத்து ஈடுபடுத்துவதற்கான ஒரு தளத்தை அமைத்தல்

- ✓ நலவாழ்வில் சமத்துவம் மற்றும் சமூக நீதியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்

- ✓ உள்ளூர் முயற்சிகளை ஊக்குவிக்கும் விதமாக மாவட்டங்களுக்கும் சமூகத்திற்கும் நெகிழ்வுத் தன்மையுடைய ஒரு செயல் முறையை நிறுவுதல்

- ✓ ஆரோக்கிய மேம்பாடு மற்றும் நோய்த் தடுப்பு செயல்முறைகளில் பல்துறை ஒருங்கிணைப்பிற்கான கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்.

தேசிய நலவாழ்வு குழுமத்தின் ஆதரவு என்பது மாநிலத்தின் ஏற்கனவே உள்ள சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவது மற்றும் மேம்படுத்துவதேயன்றி, மாநில செயல்பாட்டிற்கு மாற்றாக அமையாது. தேசிய நலவாழ்வு இயக்கமானது தேவைக்கேற்ப புதிய மருத்துவமனைகள் மற்றும் அது சார்ந்த கட்டிடங்கள் கட்டுதல், மருந்து மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல், மருத்துவ மற்றும் இதர சுகாதார பணியாளர்களை நியமித்தல் ஆகிய வகைகளில் மாநிலத்திற்கு பயனுள்ள நிதி ஆதாரங்களை வழங்குகிறது. பொது சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் உள்ள சிரமங்களை எதிர்கொள்வதிலும், வெற்றிகரமாக மாநில சுகாதார அமைப்பு தேசிய அளவில் புகழ்பெற்றதாகும். அவ்வாறே மக்களுக்கு சமமான, எளிதில் அணுகத்தக்க மற்றும் தரமான சுகாதார சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது.

**தேசிய நலவாழ்வு குழும செயலாக்க கட்டமைப்பு**

**திட்ட மேலாண்மை அலகுகள்**

மாநில அளவில், மாநில நலவாழ்வு சங்கம் குழும இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. இச்சங்கத்தின் பணிகளுக்கு மாநில திட்ட மேலாண்மை அலகு துணைபுரிகிறது.

# 5. தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை - 2019

'தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை - 2019'ஐ தமிழக அரசு நேற்று வெளியிட்டது. மின்சார வாகனங்கள் தயாரிப்பை அதிகரிக்கவும் விலையை குறைக்கும் வகையிலும் பல்வேறு வரி சலுகைகள் புதிய கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் காற்று மாசுபடுவதை குறைக்கவும் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க தமிழக அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. இதற்காக மின்சார வாகனங்களை அதிகம் உற்பத்தி செய்ய வசதியாக 'தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை - 2019' தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த கொள்கையை முதல்வர் பழனிசாமி நேற்று தலைமை செயலகத்தில் வெளியிட்டார். தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத், போக்கு வரத்து துறை அமைச்சர் விஜயபாஸ்கர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

புதிய கொள்கையின்படி அனைத்து மின்சார இரு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், பஸ்கள், இலகு ரக சரக்கு வாகனங்கள் ஆகியவற்றுக்கு 100 சதவீதம் மோட்டார் வாகன வரி விலக்கு 2022ம் ஆண்டு வரை வழங்கப்படும். மின்சார வாகனங்கள், அதன் உதிரி பாகங்கள், பேட்டரிகள், அதற்கான மின் ஏற்று உபகரணங்கள், உற்பத்தி செய்வோருக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும். 50 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்தும் குறைந்தபட்சம் 50 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**சலுகைகள் என்னென்ன**

- ✓ தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும் மின்சார வாகனங்களுக்கு 2030 வரை மாநில ஜி.எஸ்.டி. வரி 100 சதவீதம் திரும்ப வழங்கப்படும்
- ✓ மின்சார வாகனங்கள் உற்பத்திக்கான முதலீடுகளுக்கு 15 சதவீதம் வரையும்; பேட்டரி உற்பத்திக்கான முதலீடுகளுக்கு 20 சதவீதம் வரையும் மூலதன மானியம் வழங்கப்படும். இந்த சலுகை 2025 வரை தரப்படும்
- ✓ அரசு தொழிற் பூங்காக்களில் மின்சார வாகனங்கள் மின் ஏற்று உபகரணங்கள் பேட்டரிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்க நிலத்தின் விலையில் 20 சதவீதம் வரை மானியமாக வழங்கப்படும்

- ✓ தென் மாவட்டங்களில் முதலீடு செய்தால் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 20 சதவீதம் கூடுதல் மூலதன மானியம் வழங்கப்படும். இந்த சலுகை 2022 வரையிலான முதலீடுகளுக்கு பொருந்தும்
- ✓ இத்தகைய நிறுவனங்கள் தொழிற்சாலை அமைக்க நிலம் வாங்கும்போது 100 சதவீத முத்திரைத்தாள் கட்டண விலக்கு அளிக்கப்படும். இந்த சலுகை 2022 வரையிலான முதலீடுகளுக்கு பொருந்தும்; 100 சதவீதம் மின்சார வரி விலக்கு அளிக்கப்படும்
- ✓ வாகன உற்பத்தி அதன் உபகரங்களை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் 2025 வரை உருவாக்கும் ஒவ்வொரு புதிய வேலை வாய்ப்புக்கும் நிறுவனங்களின் பங்களிப்பாக செலுத்திய தொழிலாளர் சேம நல நிதிக்கு ஈடான தொகை மானியமாக வழங்கப்படும்
- ✓ வாகன உற்பத்தி மையங்களிலும் மின்சார வாகன உற்பத்தியில் முதலீடுகளை ஈர்க்கும் திறன் உடைய பகுதிகளிலும் அரசு சார்பில் பிரத்யேகமாக மின்சார வாகன உற்பத்தி தொழிற் பூங்காக்கள் உருவாக்கப்படும்
- ✓ நகரங்கள் மற்றும் பிற இடங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் ஏற்று வசதிகளை சொந்தமாகவோ அல்லது தனியார் பங்களிப்பு வழியாகவோ ஏற்படுத்தும்
- ✓ உணவகங்கள், வணிக வளாகங்கள், தியேட்டர்கள் போன்ற அனைத்து வணிக கட்டடங்களிலும் மின் ஏற்று வசதி ஏற்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்
- ✓ அரசு போக்குவரத்து கழகங்கள் மின்சார பஸ்களை வாங்க தேவையான நிதியுதவிகள் வழங்கப்படும். மூன்று சக்கர மின்சார வாகனங்களுக்கு திறந்த நிலை அனுமதி வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வரும்
- ✓ நகரங்களில் உள்ள அனைத்து புதிய கட்டுமானங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் திட்டமிடல் நிலையிலேயே வானகங்களுக்கான மின்னேற்று வசதிகளை ஏற்படுத்தும் வகையில் கட்டடம் மற்றும் கட்டுமான சட்டங்களில் தேவையான மாறுதல்கள் செய்யப்படும்
- ✓ தமிழ்நாடு அரசு மின்சார வாகன உற்பத்தி துறையில் புதிதாக தொழில் துவங்குவோருக்கு தனிக் கவனத்துடன் ஊக்கமளிக்கும்
- ✓ இரு சக்கர வாகனங்களுக்கு 2022 வரை 100 சதவீதம் சாலை வரி விலக்கு அளிக்கப்படும். பதிவு கட்டணம் விலக்கி கொள்ளப்படும். மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு அனுமதி கட்டணம் சாலை வரி பதிவு கட்டணம் ரத்து செய்யப்படும். இலகு ரக சரக்கு வாகனங்களுக்கும் சாலை வரி பதிவு கட்டணம் 2022 வரை கிடையாது. இவ்வாறு தமிழக அரசு சலுகைகளை அறிவித்துள்ளது.

# 6. தமிழ்நாடு மாநில வனக்கொள்கை 2018

முகவுரை

காடு வளர்ப்பு என்பது, வாழ்வாதாரக் கூறுகளாக உள்ள மண், நீர், காற்று மற்றும் பல்வகை உயிரித்தொகுதி ஆகியவற்றின் மீது ஏற்படுகிற முக்கியமான தாக்கத்துடன், இயல்பான முறையில் நிலப்பகுதியைப் பயன்படுத்துவதாகும். இம்மாநில மக்களின் உயிரின வாழ்க்கைச்சூழல் பாதுகாப்பு மற்றும் நலன் ஆகியவற்றுக்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாட்டிலுள்ள வனங்களை மேலாண்மை செய்வது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. வனங்களைப் பாதுகாத்தல், நீடித்த வகையில் மேலாண்மை செய்தல் மற்றும் வனங்களை மீட்டல் ஆகியவற்றுக்கான நடவடிக்கையானது, பொருளாதார வளர்ச்சி, வறுமை தணிப்பு, உணவுப்பாதுகாப்பு, பருவநிலை எதிர்விசைப்பு ஆகியவற்றுக்கு பெருமளவில் பங்களிப்பாக அமையும். வனங்கள், தட்பவெப்ப மாற்றத்தால் ஏற்படுகிற தாக்கத்தைக் கணிசமாகத் தணிப்பதிலும், மாற்றியமைப்பதிலும் இவை பெரும்பங்காற்றுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள வனங்கள், நமது மாநிலத்தின் கலாச்சார மற்றும் ஆன்மீக மாண்புகளுக்கும் சிறப்பான முறையில் பங்கு பணியாற்றுகின்றன.

வனக்கொள்கையின் அவசியம்

- நீண்ட நெடும் கடற்கரை;
- கிழக்கு மற்றும் மேற்கு மலைத் தொடர்களின் சங்கமம்;
- வறண்ட பருவநிலை மற்றும் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டிய பாங்கு;
- வனப்பகுதிகளுக்கு வெளியேயும் மரங்களை வளர்த்து அதன் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம்

போன்ற தனித்துவமான பண்புகளைக் கொண்ட மாநிலமாகத் திகழ்வதால், இம்மாநிலத்திற்கு குறிப்பிடத்தக்க வனக்கொள்கை இருக்கவேண்டியது அவசியமாகிறது. தேசிய வனக் கொள்கையின் நோக்கங்கள் மற்றும் தமிழக அரசின் தொலைநோக்குத் திட்டம் 2023' ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட தொலைநோக்கங்களை எய்துவதற்கும், இக்கொள்கை அவசியமாகிறது. எனவே, கீழ்க்கண்டவற்றை மாநில வனக்கொள்கை விளக்கமாகத் தெரிவிக்கிறது.

1988-ஆம் ஆண்டு தேசிய வனக்கொள்கை, உயிரின் வாழ்க்கைச் சூழலின் சமநிலையைப் பராமரித்து, சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையை உறுதி செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், மொத்த நிலப்பரப்பில், மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பிலும், மொத்த மலைப்பகுதியின் பரப்பில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு பரப்பிலும், மரங்களை வளர்த்து, அவற்றை வனப்பகுதியாக உருவாக்குகிற அல்லது அடர்த்தியான மரவளர்ப்பு சாதனையை எய்துவது மேற்சொன்ன இக்கொள்கையின் நோக்கமாகும்.

தமிழக அரசு, 2014-ஆம் ஆண்டில், உட்கட்டமைப்பு வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கான வினைமுறைத்திறன் திட்டங்கள் கொண்ட 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023' என்னும் திட்டத்தினை தொடங்கியுள்ளது. பாரம்பரியச் சிறப்பினைப் பேணி வளர்ப்பதும், சூழலியலைப் பாதுகாப்பதும் தொலைநோக்கத்தின் ஓர் முக்கிய கருப்பொருளாகும். ஏனையவற்றுடன், வனப்பரப்பினை அதிகரிப்பது, சதுப்பு நிலங்கள் மற்றும் ஏனைய நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பது, கடலோரப்பகுதி மற்றும் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகிற மென்மையான சூழலியலைப் பாதுகாப்பது மற்றும் மாநிலத்தின் விலங்கு மற்றும் தாவர இனங்களின் பன்முகத் தன்மையினைப் பாதுகாப்பது உள்ளிட்டவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். மேலும், 33 சதவீத வனம் / அடர்த்தியான மரவளர்ப்பு என்ற இலக்கை அடைவதற்கான மற்றொரு மிக முக்கியமான மற்றும் செலவு குறைந்த உத்திமுறையானது, காடுகளுக்கு வெளியே அடர்த்தியாக மரங்களை வளர்ப்பதேயாகும்.

அடிப்படை நோக்கங்கள்

மாநில வனக்கொள்கையின் நோக்கங்களில், இயற்கை வனப்பகுதிகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாத்தல், உயிரின் வாழ்க்கைச் சூழலின் அமைப்புமுறை, அதன் வேறுபட்ட மரபியல் பண்புகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையை உறுதி செய்தல், வனங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல், வனப்பகுதிகளிலுள்ள நீர் ஆதாரங்களைப் பெருக்குதல், மாநிலம் முழுவதிலும் அடர்த்தியாக மரம் வளர்க்கும் பரப்பளவை அதிகரித்தல் மற்றும் தட்பவெப்ப மாற்றத்தால் ஏற்படுகிற தாக்கத்தை தணித்தல் ஆகியவையும் அடங்கும்.
தமிழ்நாடு வனக்கொள்கையின் அறிவிக்கப்பட்ட நோக்கங்களை எய்துவதற்காக முக்கியத்துவம் அளிக்கிற முக்கிய அம்சங்களாவன:

1. பல்வகை உயிரின தாவரத்தொகுதி மற்றும் அவற்றின் மரபியல் வளத்தைப் பாதுகாத்தல்;
2. வளங்குறைந்த வனப்பகுதிகளுக்கு புத்துயிர் அளித்து சீரமைத்தல்;
3. கடலோரப்பகுதிகளின் உயிரின் வாழ்க்கைச் சூழலின் அமைப்பு முறையைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்;
4. வனத்தின் உள்ளேயும் மற்றும் வெளியேயும், மரம் வளர்ப்பதை அதிகரிப்பதன் வாயிலாக தட்பவெப்ப மாற்றத்தால் ஏற்படுகிற தாக்கத்தைத் தணிப்பது மாற்றி அமைப்பது;
5. வனப்பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வரத்து மேலாண்மை வாயிலாக நீர் வளத்தைப் பெருக்குதல்;
6. வனவிலங்கு மேலாண்மையைப் பாதுகாத்துப் பேணுவதற்கு, உள்ளூர் மக்களை, குறிப்பாக பழங்குடியினரை ஈடுபடச்செய்தல்;
7. அறிவியல் சார்ந்த வன மேலாண்மைக்கான ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு;

8. உள்ளூர் மக்களுக்கு, குறிப்பாக பழங்குடியினரின் வாழ்வாதாரத்திற்கு வகை செய்வதற்காக, உயிரின் வாழ்க்கைச் சூழல் செறிந்த பகுதிகளில் சுற்றுலா மேற்கொள்ளுதல்;
9. வன மேலாண்மைக்கான மனித வளத்தை மேம்படுத்துதல். பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்

செயலாக்க முறை

மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்கு பின்வரும் செயலாக்க முறைகள் பின்பற்றப்படவுள்ளன.
பல்வகை உயிரினத் தாவரத் தொகுதி, வனவிலங்கு மற்றும் அவற்றின் மரபியலைப் பாதுகாத்தல் மாநிலத்தின் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்கு, 40 சதவீதத்திற்கும் அதிகமான மர அடர்த்தியைக் கொண்டுள்ள சுமார் 13,462 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அடர்ந்த வனப்பகுதிகளைப் பாதுகாத்து வருவது மிக மிக அவசியமாகும். நம் மாநிலம், ஏறக்குறைய 30.92 சதவீத நிலப்பரப்பை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவித்துள்ளது. மேலும், நமது மாநிலம் உலகளாவிய மாபெரும் பல்வகை உயிரி தாவரத் தொகுதியைக் கொண்டுள்ள இடங்களுள் ஒன்றாகிய குறிப்பிட்ட சில வகையைச் சேர்ந்த பூச்செடிகள் மற்றும் விலங்கினங்கள் காணப்படும் பகுதியாக விளங்கும் மேற்கு மலைத் தொடர் பகுதியை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தநாள் நிலவரப்படி, இம்மாநிலத்தில், 15 வன உயிரினச் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 15 பறவைகள் சரணாலயங்கள், 3 உயிர்க்கோள் காப்பகங்கள், 2 பாதுகாக்கப்பட்ட புகலிடங்கள், 4 புலிகள் காப்பகங்கள் மற்றும் 1 மரபியல் தொகுப்பு தோட்டம் ஆகியவை உள்ளன. மேலும், இம்மாநிலம், தனிச்சிறப்புடைய கடலோரப்பகுதிகளையும், வளமான சதுப்பு நிலத் தாவரங்கள் மற்றும் வனப்பகுதி இணைவுடன் கூடிய தாவர வகைகளைக் கொண்டுள்ளது. கிழக்கு மலைத்தொடரும் இம்மாநிலத்திற்குரிய பல்வகை உயிரினத் தாவரத் தொகுதி வளங்களுக்கு செழுமை சேர்க்கிறது.

பரந்துபட்ட இந்த தாவரங்களையும், வன விலங்குகளையும் பாதுகாக்கும் பொருட்டு, அவ்வப்போது மத்திய அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டிக்குறிப்புகளிலும், தேசிய வனவிலங்கு செயல் திட்டத்திலும், வகை செய்யப்பட்டவாறாக, பாதுகாக்கப்பட்ட பகுதி வலுப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்படும். பெருவழிகளைக் கையகப்படுத்துவதன் மூலமாகவும், இயற்கையான வசிப்பிடங்களை விரிவுபடுத்துவதன் மூலமாகவும் பாதுகாப்புப்பகுதியை அதிகரிக்கக் கருதியுள்ள நடவடிக்கையானது, பாதுகாக்கப்பட்ட பகுதிகளை, காப்புக்காடுகளுடன் இணைக்கவும், வன விலங்குகளுக்கு பரந்த வசிப்பிடப்பகுதிகளை வகை செய்யவும் உதவும். வன விலங்குகளால் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்து இழப்பு மற்றும் பயிர்சேதத்திற்கு குறித்த காலத்தில் இழப்பீடு வழங்கும் நடவடிக்கை செயல்படுத்தப்படும். இது மனிதர்களால் வனவிலங்குகளுக்கும், வன விலங்குகளால் மனிதர்களுக்கும் ஏற்படுகிற பிரச்சினைகளைக் குறைக்கும்.

சேதத்துக்குள்ளாகாத வாழ்விடங்களை உருவாக்குவதற்காக, புலிகள் காப்பகங்கள் உள்ள பகுதிகளில் அமைந்திருக்கிற வனவாசிகளின் வசிப்பிடங்களை உரிய இடமாற்ற வசதிகளுடன் அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாற்றுகிற நடவடிக்கை ஊக்குவிக்கப்படும். வனவிலங்குகளின் வாழ்விடங்களைப் பாதுகாக்கவும், பாதுகாப்பான பரவலை உறுதிப்படுத்தவும், ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட பகுதியைச் சுற்றியுள்ள சூழலமைவுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதி கண்டறியப்பட்டு அறிவிக்கையிடப்படும்.

வனப்பகுதிகளின் உரிய அளவு பாதுகாப்பை உறுதி செய்து, இதன் மூலம் உயிரின் வாழ்க்கைச் சூழல் அமைப்பு முறை மற்றும் அவற்றின் மரபியல் வளங்களைப் பேணிக் காப்பதற்கு, வனச்சட்டங்களை கண்டிப்பாக செயல்படுத்துவது உறுதி செய்யப்படவேண்டும். வேற்றுவகை தாவரங்கள் இயற்கை வனப்பகுதிகளாக மாற்றப்படும். குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள இனங்களைப் பேணிக் காப்பதற்கும் அவற்றின் வளங்களை மேம்படுத்துவதற்கும், சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அயல் தாவர வகைகளின் ஊடுருவலை தடுக்க விஞ்ஞான ரீதியில் முயற்சி மேற்கொள்ளப்படும். உள்ளூர் மக்களின் ஈடுபாட்டுடன், வனப்பகுதிகளில் மேய்ச்சல் முறைப்படுத்தப்படும்.

காட்டுத் தீ ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, கிராம மக்களிடமிருந்து ஒத்துழைப்பைப் பெறுவதற்காக, மனமார்ந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். காட்டுத் தீயைக் கண்டறிவதற்காகவும், அதை அணைப்பதற்காகவும், நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் துறையின் திறன்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நிலத்தின் உடைமை உரிமையைக் கருதிப்பாராமல் தனியார் நிலங்களில் உள்ள இயற்கை வளங்களையும் அருகி வருகிற தாவர வகைகள் இயற்கையாக செழித்து வளருகிற இடங்களையும் மற்றும் விலங்கினங்களின் வசிப்பிடங்களையும் பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக, தனியார் நிலங்கள், வனம் சாராத நோக்கங்களுக்காக, கள்ளத்தனமாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தடுத்தல்.
சரியான நிலப்பயன்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்திசைவான வருமானத்தை அளிப்பதற்கான வழிவகைகள் மூலம் சாகுபடி முறையை மாற்றுவது தவிர்க்கப்படும்.

உயிரின வாழ்க்கைச்சூழலைப் பேணுவதற்காக, தற்போதுள்ள வனப்பகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு, வனப்பாதுகாப்புச் சட்டம் 1980 கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு இனத்திற்கும் ஏற்றவாறு, வன நிலங்களை, வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். வனங்களுக்குள், வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்துதல் கட்டுப்படுத்தப்படும். வனத்திற்குள், வணிக நடவடிக்கைகள் தடை செய்யப்படும்.

வனங்களை, முன்னிருந்த அதே இடத்தில் பாதுகாத்தல், முன்னிருந்த இடத்திற்கு வெளியில் - வெற்றிகரமாகப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான வலுவான இணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். பெரிய மற்றும் சிறிய உயிரியல் பூங்காக்கள்

மற்றும் மரபணு தொகுப்புத் தோட்டம்' ஆகியவை வனங்களை வெற்றிகரமான முறையில் பாதுகாப்பதற்கான இத்தகைய இணைப்பு வசதிகளை ஏற்படுத்துகிற பணியில் ஈடுபடுத்தப்படும்.

## 7. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான இந்திய மற்றும் தமிழக அரசின் திட்டங்கள்

பிரதமரின் தாய்மை வந்தன திட்டம்

இந்த திட்டமானது 01.01.2017 அன்று செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் பெயர் பிரதம மந்திரி மாத்ரு வந்தன திட்டம். பிரதமரின் தாய்மை வந்தனத் திட்டம் (PMMVY) என்பது பெண்களுக்குப் பேறுகாலப் பயன்கள் தரும் திட்டமாகும். 2013 ஆம் ஆண்டின் உணவு உறுதிப்பாடு சட்டத்தின் படி, நம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அவர்களுடைய முதல் குழந்தைக்கு மூன்று தவணை மூலம் ரூ 5000 வழங்கப்படுகிறது. அதேபோல் தமிழக அரசு வழங்கும் ரூ.18,000/- உதவி தொகையுடன், இந்த மத்திய அரசு வழங்கும் ரூ.5,000/- உதவி தொகையையும் பெற்று கொள்ளலாம்.

**இந்த திட்டத்தின் நோக்கம்:-**

இந்தியாவில் வாழும் ஏழை எளிய தாய்மார்களின் முதலாவது குழந்தை பெறுவதற்கு முன்னும், குழந்தை பெற்ற பின்பும் போதிய ஓய்வு எடுப்பதற்கு ஏதுவாக, அவர்கள் வேலைக்குப் போகாமல் இருப்பதால் ஏற்படும் பண இழப்பை ஓரளவுக்கு ஈடுகட்டும் வகையில் மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. இதனால் கருவுற்ற பெண்களுக்கும், பாலூட்டும் பெண்களுக்கும் ஓரளவு ஆரோக்கியமான நிலை உருவாகிறது.

**யாரெல்லாம் பயன்பெறலாம்:-**

இந்த திட்டத்தை பொறுத்தவரை மத்திய அல்லது மாநில அரசு துறைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் தவிர, மற்ற அனைத்து கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்கள் இத்திட்டத்தில் பயணடைலாம்.

**கருக்கலைவு அல்லது குழந்தை இறந்து பிறந்தால் பயன்பெற முடியுமா?** இந்த திட்டத்தின் கீழ் ஒரே ஒரு முறை நிதி உதவி பெற முடியும். அதேபோல் தவணைகளாக வழங்கப்படும் நிதி உதவி, கருக்கலைவு அல்லது குழந்தை இறந்து பிறந்ததன் காரணமாகப் பாதியில் நிறுத்தப்பட்டால் மீதியுள்ள தவணைகளை அடுத்த குழந்தை பிறப்பின் போது பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தை பிறந்து சிலகாலம் கழித்து இறந்துவிட்டாலும், ஒரே ஒரு முறை பயன் பெறும் இத்திட்டத்தில் ஏதாவது தவணைகள் பாக்கி இருந்தால் மட்டும், அடுத்த குழந்தைப் பிறப்பின் போது, நிபந்தனைகளையும் தகுதியையும் நிறைவேற்றினால், பெற்றுக்கொள்ளலாம்.

**பயன்கள்:-**

மூன்று தவணைகளில் மொத்தம் ரூ.5000/- வழங்கப்படும். அதாவது கருவுற்றப் பெண்கள் அங்கன்வாடி மையம் அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களில், பதிவு செய்து கொண்டதும், முதல் தவணையாக ரூ.1000/- வழங்கப்படும். கருவுற்ற காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைகளில் குறைந்தது ஒரு பரிசோதனைக்காவது வந்தவர்களுக்கு, ஆறாவது மாத கர்ப்பகாலத்தின் போது, இரண்டாவது தவணையாக ரூ.2000/- தரப்படும்.

குழந்தை பிறந்த பிறகு, அதனைப் பதிவு செய்து, BCG, OPV, DPT, ஹெப்படிடிஸ் B ஆகிய தடுப்பூசிகளின் முதலாவது தவணையைப் போட்ட பிறகு உதவித் தொகையின் மூன்றாவது தவணையான ரூ.2000 வழங்கப்படும்.

மேலும் இந்த திட்டத்தில் பிரதமரின் தாய்மை வந்தன திட்டத்தின் கீழ் பயன்பெறுகிறவர்கள், மருத்துவ மனைகளில் பிள்ளை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY) வின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகையான 1000 ரூபாயையும் பெறலாம்.

**பதிவு செய்யும் முறை:-**

தாய்மை வந்தன திட்டத்தின் கீழ் பயன் பெறத் தகுதியுள்ளவர்கள் கருவுற்றதும், அங்கன்வாடி மையம் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார மையங்களில் சென்று பதிய வேண்டும்.

இங்கு கொடுக்கப்படும் விண்ணப்ப படிவம் 1-A-யில் தங்களுடைய அனைத்து விவரங்களையும் நிரப்பி, தேவையான ஆவணங்களுடன், கருவுற்ற பெண் மற்றும் அவருடைய கணவனின் கையொப்பங்களுடன் சம்பந்தப்பட்ட மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

கணவனின் ஆதார் எண், பெண்ணின் வங்கி கணக்கு எண், யாராவது ஒருவருடைய கைபேசி எண் ஆகியவை கண்டிப்பாக உள்ளிட்ட வேண்டும்.

பின் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களை அங்கன்வாடி மையங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சுகாதார மையங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய அரசின் மகளிர்-குழந்தைகள் நல அமைச்சகத்தின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

**முதலாவது தவணைநிதி உதவி:-**

பதிவு செய்வதற்கும், முதலாவது தவணை நிதி உதவியைப் பெறுவதற்கும், தாய்-சேய் பாதுகாப்பு அட்டையின் (MCP card) நகல், பெண் மற்றும் கணவனின் அடையாளச் சான்று, வங்கிக்கணக்கு அல்லது அஞ்சலகக்கணக்கு எண் விவரம் ஆகியவற்றோடு, படிவம் 1-A நிறைவு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

**இரண்டாவது தவணைநிதி உதவி:-**

இரண்டாவது தவணை நிதி உதவியைப் பெற, கர்ப்பம் தரித்த ஆறாவது மாதத்தில், தாய்-சேய் பாதுகாப்பு அட்டையில் குழந்தைப் பிறப்பிற்கு முந்தைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட விவரங்களைப் பதிந்து, அதன் நகலுடன், படிவம் 1-B ஐ நிரப்பித் தரவேண்டும்.

**மூன்றாவது தவணைநிதி உதவி:-**

மூன்றாவது தவணை நிதி உதவியைப்பெற, குழந்தையின் பிறப்பினைப் பதிவு செய்த சான்றின் நகல், குழந்தைக்கு முதலாவது தவணை தடுப்புசி போட்ட விவரங்கள் கொண்ட தாய் – சேய் பாதுகாப்பு அட்டையின் நகல் ஆகியவற்றுடன், படிவம் 1-C ஐ நிரப்பித்தர வேண்டும்.

**குறிப்பு:-**

தாய்மை வந்தன திட்டத்தின் கீழ் பணப்பயன் பெறத்தகுதி இருந்தும் பதிவு செய்யாமல் விட்டிலிருந்தாலும், நிதிஉதவியைப் பெற வழி உண்டு. அப்படிப் பதிவு செய்யாதவர்கள் கருவுற்ற நாளில் இருந்து ஒன்பது மாதத்திற்குள் விண்ணப்பிக்கலாம். இல்லை என்றால் குழந்தை பிறந்த பின்னர் ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கலாம்.

**டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டம் என்பது தமிழ்நாடு அரசின் சார்பில், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறுகாலத்தின்போது ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்யவும், அவர்கள் சத்தான உணவுகளை உண்ண வழிவகை செய்யவும், பேறுகாலத்துக்கு முன் இரு மாதங்கள் மற்றும் பின் இரு மாதங்களுக்கு என மொத்தம் 4 மாதங்களுக்கு தலா ரூ.50 வீதம் மொத்தம் ரூ.200 வழங்க, மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால், கடந்த 02-05-1989 அன்று சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டம். அதன்படி கடந்த 13-04-1989 அன்று, தமிழ்நாடு அரசின்

பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறையின் சார்பில் அரசாணை பிறப்பிக்கப்பட்டு (அரசாணை (நிலை) எண்: 369) பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

பிறகு, 1998 ஆம் ஆண்டு திமுக ஆட்சியின்போது, இந்த நிதியுதவி 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. பின்னர், 2006-2007 நிதியாண்டு முதல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. தொடர்ந்து, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அதிமுக ஆட்சியில் இந்தத் தொகை 12,000 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டது. தற்போது, 01.04.2018 முதல் 18,000 ரூபாயாக மீண்டும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

**நிதியுதவி**

இத்திட்டத்தின் கீழ் ஏழைக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு வழங்கப்படும் உதவி தொகை ருபாய் 6 ஆயிரத்திலிருந்து , ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையில், முதல் தவணையாக ரூபாய் 4000/- கருவுற்ற ஏழாவது மாதத்திலும், இரண்டாவது தவணையாக ரூபாய் 3000/- குழந்தை பிறந்த பின்பும் , பிரசவத்துக்குப் பின்னர் முத்தடுப்பு ஊசி செலுத்தியதும் 3-வது தவணையாக ரூ. 4 ஆயிரமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

- இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, பயனாளி வறுமைக் கோட்டிற்குகீழ், அதற்கான தகுதியுடையவராக இருக்க வேண்டும்.
- அரசு மருத்துவ நிலையங்களில் மட்டுமே பிரசவம் நடைபெற்றிருக்க வேண்டும்.
- பயனாளி 19 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- இந்த நிதிஉதவி இரண்டு பிரசவங்களுக்கு மட்டும் வழங்கப்படும்

**தகுதிகள்**

இந்த நிதியுதவியைப் பெற கீழ்காணும் ஏதாவது ஒரு நிலையில் இருப்பவர்களாக இருக்க வேண்டும்.

- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியலில் உள்ளவர்கள்.
- தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்ட உறுப்பினர் அட்டை வைத்திருப்பவர்கள்.
- குடிசை வீடு, சிறிய ஓட்டு வீடு மற்றும் சிறிய வாடகை வீட்டில் வறிய நிலையில் வசிப்பவர்கள்.

- தொகுப்பு வீடுகள், சுனாமி அழிவினால் கட்டித்தரப்பட்ட வீடுகள் மற்றும் அரசு இலவசமாக வழங்கப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள்.
- விவசாயக் கூலி வேலை, சலவைத் தொழில், ஆட்டோ முதலான வாகனங்களை தினக்கூலிக்கு ஓட்டுபவர்கள்.
- கல்குவாரி, சுண்ணாம்பு காளவாய், செங்கல் சூளை போன்றவற்றில் தினக்கூலிக்கு வேலை செய்பவர்கள்.
- சொந்த வீடு இருந்தும் கூலி வேலை செய்பவர்கள்.
- நிலமற்ற ஏழைகள்.
- குடும்பத் தலைவர் பருவ காலத்திற்கு ஏற்றவாறு வெளியூர் சென்று கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுபவர்கள்
- பெண்கள் குடும்பத்தலைமைப் பொறுப்பேற்ற குடும்பங்கள்.
- வேலைக்குச் செல்ல இயலாதவர்கள்.

## 8. *ஆயுஷ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கம்*

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கத்தைத் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். வாரணாசிக்கான ரூ. 5,200 கோடி மதிப்புள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் அவர் தொடங்கிவைத்தார். உத்தரப் பிரதேச ஆளுநர், முதலமைச்சர், மத்திய அமைச்சர்கள் டாக்டர். மன்ஷூக் மண்டாவியா, டாக்டர். மஹேந்திர நாத் பாண்டே, இணை அமைச்சர்கள், மக்களின் பிரதிநிதிகள் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் 100 கோடி தடுப்பூசி டோஸ்கள் செலுத்தி நாடு மிகப் பெரிய வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது என்று கூடியிருந்தோரிடையே உரையாற்றிய பிரதமர் கூறினார். "பாபா விஸ்வநாத் ஆசியுடன், அன்னை கங்கையின் நிலையான புகழுடன், காசி மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் அனைவருக்கும் கட்டணமில்லா தடுப்பூசி இயக்கம் வெற்றிகரமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது" என்று பிரதமர் கூறினார்.

இந்திய சுதந்திரத்திற்குப் பின் மிக நீண்ட காலத்திற்கு சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு போதிய கவனம் பெறவில்லை, இதனால் குடிமக்கள் முறையான சிகிச்சைக்கு அங்கும் இங்குமாக அலைந்துகொண்டிருந்தனர். இது நிலமை மோசமாகவும் நிதிச்சுமைக்கும் வழி வகுத்தது என்று பிரதமர் குற்றம் சாட்டினார். இதன் காரணமாக மருத்துவ சிகிச்சை குறித்து நடுத்தர வகுப்பினர் மற்றும் ஏழை மக்களின் இதயங்களில் தொடர்ச்சியான கவலை நிலைகொண்டது. நீண்ட காலத்திற்கு நாட்டின் அரசுகளில் நீடித்திருந்தவர்கள் நாட்டின் சுகாதார கவனிப்பு முறையின் அனைத்து நிலை வளர்ச்சிக்கு பதிலாக வசதிகளின் சீரழிவுக்கு இட்டுச்சென்றனர்.

இந்தக் குறைபாடுகளைக் களைவது பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கத்தின் நோக்கமாகும் என்று பிரதமர் கூறினார். அடுத்த 4-5 ஆண்டுகளில் கிராமத்திலிருந்து ஒன்றியத்திற்கும், மாவட்டத்திற்கும், பிராந்தியத்திற்கும் தேசிய நிலைக்கும் முக்கியமான சுகாதார கவனிப்பு

வலைப்பின்னலை வலுப்படுத்துவது இதன் நோக்கமாகும். புதிய இயக்கத்தின் கீழ் அரசால் மேற்கொள்ளப் பட்டிருக்கும் முன்முயற்சிகளை விவரித்த பிரதமர், நாட்டின் சுகாதாரத் துறையில் உள்ள பல வகையான இடைவெளிகளைப் போக்குவதற்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கம் 3 முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்றார். முதலாவது அம்சம் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கு விரிவான வசதிகளை உருவாக்குவது தொடர்பானது. இதன்படி நோய்களை முன்கூட்டியே கண்டறியும் வசதிகளுடன் கிராமங்களிலும் நகரங்களிலும் சுகாதார மற்றும் உடல் ஆரோக்கிய மையங்கள் திறக்கப்பட உள்ளன. இந்த மையங்களில் கட்டணமின்றி மருத்துவ ஆலோசனை, கட்டணமின்றி பரிசோதனைகள், விலை இல்லாமல் மருந்து போன்ற வசதிகள் கிடைக்கும். கடுமையான உடல் நோய்க்கு 600 மாவட்டங்களில் புதிய தீவிர சிகிச்சை தொடர்பாக 35,000 படுக்கைகள் அதிகரிக்கப்படும், பரிந்துரை வசதிகள் 125 மாவட்ங்களில் அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் இரண்டாவது அம்சம், நோய்களைக் கண்டறிவதற்கான பரிசோதனை வலைப்பின்னல் தொடர்புடையதாகும் என்று பிரதமர் கூறினார். இந்த இயக்கத்தின் கீழ் நோய்களைக் கண்டறியவும் கண்காணிப்பதற்கும் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதி உருவாக்கப்படும். நாட்டின் 730 மாவட்டங்கள் ஒருங்கிணைந்த பொது சுகாதார பரிசோதனைக் கூடங்களைப் பெற்றிருக்கும். 3 ஆயிரம் ஒன்றியங்கள் ஒன்றிய பொது சுகாதார அலகுகளைக் கொண்டிருக்கும். இவைத் தவிர நோய்க் கட்டுப்பாட்டுக்கான 5 மண்டல தேசிய மையங்கள், 20 பெருநகர அலகுகள், 15 உயிர்ப் பாதுகாப்பு நிலையிலான பரிசோதனைக் கூடங்கள் இந்த வலைப்பின்னலை மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் கூறினார்.

மூன்றாவது அம்சம், பெருந்தொற்றுகள் பற்றி ஆய்வு செய்யும் தற்போதுள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் விரிவாக்கம் செய்யப்படுவதாகும் என்று பிரதமர் கூறினார். தற்போது செயல்படும் 80 வைரஸ் நோய் கண்டறிதல் மற்றும் ஆய்வுக்கூடங்கள் வலுப்படுத்தப்படும், உயிர்ப் பாதுகாப்பு நிலையிலான 15 பரிசோதனைக் கூடங்கள் செயல்பாட்டுக்கு வரும், வைரஸ் தொடர்பான ஆய்வுக்கு 4 புதிய தேசிய கல்விக் கழகங்களும், உள்ளூர் முதல் உலகம் வரையிலான பல துறை ஒத்துழைப்புக்கும் மனிதர்கள் விலங்குகள் தாவரங்கள் தொடர்பான சுகாதார ஆய்வுக்கு தேசிய கல்விக் கழகமும் அமைக்கப்பட உள்ளது. இந்த வலைப்பின்னலில் தெற்காசியாவுக்கான உலக சுகாதார நிறுவனத்தின் பிராந்திய ஆராய்ச்சி அமைப்பும் வலுப்படுத்தப்படும். ”பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கத்தின் மூலம் சிகிச்சை முதல் முக்கியமான ஆராய்ச்சி வரையிலான சேவைகளுக்கு ஒட்டு மொத்த சூழல் நாட்டின் அனைத்து இடங்களிலும் உருவாக்கப்படும் என்பது இதன் பொருளாகும்” என்று பிரதமர் கூறினார்.

இந்த நடவடிக்கைகளின் வேலைவாய்ப்பு அம்சங்களைப் பிரதமர் எடுத்துரைத்தார். பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு இயக்கம் ஆரோக்கியத்துடன் தற்சார்பு இந்தியாவின் அம்சமாகவும் இருக்கிறது என்று பிரதமர் கூறினார். “ஒட்டுமொத்த சுகாதார கவனிப்பை அடையும் முயற்சியின் ஒரு பகுதியாக

இது இருக்கிறது. இதன் பொருள், அனைவருக்கும் கட்டுப்படியான செலவில், எளிதாக சுகாதார கவனிப்பு கிடைப்பதாகும்". சுகாதாரத்துடன் உடல் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துவது ஒட்டு மொத்த சுகாதார கவனிப்பு என்று திரு மோடி கூறினார். தூய்மை இந்தியா இயக்கம், ஜல்ஜீவன் இயக்கம், உஜ்வாலா, ஊட்டச்சத்து திட்டம், இந்திர தனுஷ் இயக்கம் போன்ற திட்டங்கள் கோடிக்கணக்கான மக்களை நோயிலிருந்து காப்பாற்றியுள்ளன. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் இரண்டு கோடிக்கும் அதிகமான ஏழை மக்கள் கட்டணமின்றி சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் மூலம் சுகாதாரம் சார்ந்த பல பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

ஏழைகள், அடித்தட்டு மக்கள், ஒடுக்கப்பட்டோர், பின்தங்கியோர், நடுத்தர வகுப்பினரின் வலிகளைப் புரிந்து கொண்டதாக இப்போது மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள அரசுகள் இருப்பதாகப் பிரதமர் குறிப்பிட்டார். "நாட்டின் சுகாதார வசதிகளை மேம்படுத்த நாங்கள் அல்லும் பகலும் பாடுபடுகிறோம்" என்று பிரதர் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ள புதிய மருத்துவக் கல்லூரிகளின் வேகம், இந்த மாநிலத்தில் மருத்துவ இடங்கள் மற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் கூறினார். இடங்கள் அதிகரிப்பதன் காரணமாக ஏழைப் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் மருத்துவராக வேண்டும் என்ற கனவும் நிறைவேறும் என்று அவர் மேலும் கூறினார். புனிதமான காசி நகரின் கடந்த கால அவல நிலை பற்றி பேசிய பிரதமர் இந்த நகரின் அடிப்படை, வசதிகளின் மோசமான நிலையால் பெரும்பாலான மக்கள் வெளியேறிவிட்டார்கள். இப்போது நிலைமை மாறியுள்ளது. காசி அப்படியே இருக்கிறது. மனம் அப்படியே இருக்கிறது. ஆனால் உடலை மேம்படுத்துவதற்கு மெய்யான முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. "கடந்த பல பத்தாண்டுகளாக செய்யப்படாத பணி கடந்த 7 ஆண்டுகளில் வாரணாசியில் செய்யப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார். உலக அளவிலான சிறந்த நிறுவனமாக பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் முன்னேற்றம் கண்டிருப்பது கடந்த சில ஆண்டுகளில் காசியின் முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும். "தற்போது தொழில்நுட்பத்திலிருந்து சுகாதாரம் வரை முன் எப்போதும் இல்லாத வகையிலான வசதிகள் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதிலுமிருந்து இளம் நண்பர்கள் இங்கே கல்வி பயில வருகின்றனர்" என்பதைப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

வாரணாசியில் கடந்த ஐந்தாண்டுகளில் காதி மற்றும் குடிசைத் தொழில் பொருட்களின் உற்பத்தி வளர்ச்சி 60 சதவீதம், விற்பனை வளர்ச்சி 90 சதவீதம் என்பதைப் பாராட்டிய பிரதமர் "உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவு" என்ற நாட்டு மக்களின் உணர்வையும் பாராட்டினார். உள்ளூர் பொருட்கள் என்பதற்கு அகல் விளக்குகள் போன்ற ஒரு சில பொருட்கள் என்று அர்த்தமாகாது. கிராமபுற மக்களின் கடின உழைப்பு காரணமாக உருவாகும் எந்தப் பொருளையும் குறிப்பதாகும் என்றும் விழாக் காலங்களில் இத்தகைய பொருட்களுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஊக்கப்படுத்தி ஆதரவளிப்பது அவசியம் என்றும் அவர் கூறினார்.

# 9. தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0 மற்றும் அம்ருத் 2.0

நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக பதில் அளித்த மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் திரு கவுஷல் கிஷோர் எழுத்துபூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது:

2021ம் ஆண்டு அக்டோபர் 1ம் தேதி தொடங்கப்பட்ட தூய்மை இந்திய திட்டம்(நகர்ப்புறம்) 2.0 மற்றும் அம்ருத் 2.0 ஆகியவை நகரங்களை அடுத்த 5 ஆண்டுகளில் தூய்மையாக்குவதிலும், தண்ணீர் வசதி ஏற்படுத்துவதிலும் முக்கிய கவனம் செலுத்தும்.

**தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0-ன் முக்கிய அம்சங்கள்:**

வீடுகள் மற்றும் வளாகங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளாக பிரிக்கப்படுகின்றன.

வீடுகள் , வளாகங்களுக்கு நேரடியாக சென்று குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன.

100 சதவீதம் அறிவியல் பூர்வமாக குப்பைகள் பாதுகாப்பாக அழிக்கப்படுகின்றன.

ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு குறைவான நகரங்களில், கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படுவதால், நிலத்தடி நீர், நீர் நிலைகள் மாசுபடாது.

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் படிப்படியாக குறைக்கப்படுகிறது.

**அம்ருத் 2.0 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- ✓ தண்ணீர் விநியோகம் 500 நகரங்களில் இருந்து, 4,800 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.
- ✓ நகரங்கள் தற்சார்புடையதாகவும், நீர் பாதுகாப்புடனும் மாறுவதில் கவனம் செலுத்தப்படும்.
- ✓ 500 அம்ருத் நகரங்களில் கழிவுநீர் மேலாண்மை வசதி ஏற்படுத்தப்படும்.
- ✓ 2.68 கோடி குடிநீர் குழாய் இணைப்புகள், 2.64 கோடி கழிவுநீர் குழாய் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# 10. தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NRLM)

தீன்தயாள் அந்த்யோதயா யோஜனாவின் கீழ் அமைந்த தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டமானது (என்ஆர்எல்எம்) விளிம்புநிலையில் இருக்கும் பெண்களுக்கு, பொதுவாக வங்கிக் கடனுதவிகளைப் பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தவர்களுக்கு அத்தகைய வாய்ப்பை வழங்கும் நோக்கத்தைக் கொண்டது. ஜன் தன் யோஜனாவின் கீழ் வங்கிக் கணக்கு தொடங்கும் மோடி அரசின் பிரச்சாரமானது என்ஆர்எல்எம் திட்டம் அத்தகைய பெருவெற்றியைப் பெறுவதற்கான உத்வேகத்தை அளித்தது.

**பெண்களுக்கு வங்கிக் கணக்கு**

வங்கிக் கணக்கு தொடங்குவதன் வாயிலாக நிதித் துறையின் கீழ் அனைவரையும் உள்ளடக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்தால், அதைத் தொடர்ந்து விளிம்புநிலையில் வாழும் பெண்கள் வருமானத்தை உருவாக்கிக்கொள்ளும் செயல்பாடுகளுக்காகக் கடனுதவி செய்வதற்கான திட்டங்கள் முழுமை அடைந்திருக்காது. ஊரகப் பகுதிகளில் அனைவரையும் உள்ளடக்கிய நுண்கடனுதவிகளுக்கு முதற்படியாக வங்கிக் கணக்குகள் அமைந்தன.

‘பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா’வின் கீழ் குறைந்தபட்சம் 20.05 கோடிப் பெண்கள் தங்களுக்கென்று வங்கிக் கணக்குகள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. இதன் காரணமாக நிவாரணத் திட்டங்களுக்கான ‘ஆத்மநிர்பார் நிதி ஒதுக்கீ’ட்டின் ஒரு பகுதியாக ‘பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா’வின் கீழ் அளிக்கப்பட்ட ரூ.500 நிவாரணத் தொகையைக் கணிசமான பெண்கள் பெற்றிருக்கிறார்கள்.

என்ஆர்எல்எம் திட்டத்தின் கீழ், சமீபத்திய மதிப்பீடுகளின்படி ஏறக்குறைய 34 லட்சம் சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடன்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. வீட்டிலேயே உணவுப் பொருட்கள் தயாரித்தல், உணவு பதப்படுத்துதல், பசு வளர்ப்பு, தையல், சிறுவணிகம் மற்றும் குறுகிய பரப்பில் மலர் சாகுபடி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்தச் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்குச் சிறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் குறைந்தபட்சம் 10 அல்லது அதிகபட்சம் 20 பெண்களைக் கொண்டிருக்கிறது. எனவே, மொத்தப் பயனாளிகளைக் கணக்கில்கொண்டால், அவர்கள் அனைவருமே பெண்கள் என்பதோடு அவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 3.5 கோடியாக இருக்கும். 3.5 கோடி வீடுகளுக்குக் கடனுதவி அளிக்கப்பட்டிருப்பதாகவும் இதைப் பொருள்கொள்ளலாம்.

என்ஆர்எல்எம் திட்ட விவரங்களின்படி, இதுவரை 60 லட்சம் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் வங்கிக் கணக்கைக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எந்த விதச் சிரமமும் இல்லாமல் மேலும் 25 லட்சம் சுய உதவிக் குழுக்களுக்குக் கடனுதவி அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

**வணிக வாய்ப்பு**

இந்த வாய்ப்பைச் சமூக அடுக்கின் அடித்தட்டில் இருப்பவர்களுக்குக் கடனுதவி வழங்கும் சமூகக் கடமையாகவோ கட்டாயப்படுத்தப்பட்ட கடனாகவோ வங்கிகள் பார்க்க வேண்டியதில்லை, இது ஒரு சாத்தியமான வணிக வாய்ப்பும்கூட. பங்குதாரர்களின் மதிப்பு அதிகரிக்கவும் கூடும். இந்தியாவின் மிகப் பெரும் கடன் வழங்குநரான பாரத ஸ்டேட் வங்கியானது அனைவரையும் நிதித் துறையின் கீழ் உள்ளடக்குதல்/ நுண்கடன் சந்தை (எ.ஃப்ஐஎம்எம்) என்ற பிரிவைத் தொடங்கி, துணை மேலாண்மை இயக்குநரை நியமித்து, அத்தகைய புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முதலடியை எடுத்து வைத்துள்ளது.

வாராக்கடன் பிரச்சினைகளுக்கு வாய்ப்பில்லாத இந்த முறையின் கீழ் கடன்களை வழங்குவதற்கு அரசும் ரிசர்வ் வங்கியும்கூடப் புதிய அறிவிப்புகளை வெளியிட்டுவருகின்றன. வாழ்வாதாரங்களுக்கான இந்தக் கடன்களின் வாராக் கடன் விகிதமானது பெருநிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதாகும். நிதியிழப்பு ஏதுமில்லை, கடன் வழங்குவதற்கான கவர்ச்சிகரமான அறிவிப்புகளும் இல்லை. மூலதன இழப்பு நடந்துவிட்டதைச் சொல்லும் விவரங்களும் காட்டப்படுவதில்லை.

கடன்களைப் பெறுவதற்காகப் பெருநிறுவனங்கள் செய்யும் வழக்கமான தந்திர வலைவீச்சுகளும் இல்லை. அளிக்கப்பட்ட கடனின் ஒவ்வொரு அலகைப் பொறுத்தவரையிலும் வேலைவாய்ப்புக்கான சூழலை உருவாக்குவதில், சந்தேகங்களுக்கு இடமின்றிப் பெருநிறுவனங்களுக்கு அளிக்கப்படும் கடன்களைக் காட்டிலும் இத்தகைய நுண்கடன்களே சிறந்து விளங்குகின்றன.

**குறைவான வாராக் கடன்கள் விகிதம்**

கடைசியாக, பெருநிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் நொடிப்புநிலை மற்றும் திவால் சட்டவிதிகளின் கீழ் நடவடிக்கைக்கு ஆளாகும்போது, பிணை வைக்கப்பட்ட சொத்து சந்தை மதிப்பைக்காட்டிலும் 99% மதிப்பிழக்கிறது. பெருநிறுவனங்களுக்கு எதிரான நொடிப்புநிலை நடவடிக்கையில் வங்கிகள் அளித்த ரூ.100 கோடி கடனுக்குப் பதிலாக ரூ.1 கோடியை மட்டுமே திரும்பப் பெறுகின்றன. கடன்களைத் திரும்பப் பெறுவதில் இதைவிடவும் மோசமான நிலை வேறு இருக்க முடியாது.

ஒப்பீட்டளவில், வாழ்வாதாரங்களுக்கான கடன்களில் தேசிய அளவிலான வாராக் கடன் விகிதம் என்பது வெறும் 2% மட்டுமே. பிஹார், ஆந்திரப் பிரதேசம், வங்கம் போன்ற சில மாநிலங்களில் அந்த விகிதம் 1% ஆகவோ அல்லது அதற்கும் குறைவாகவோ இருக்கிறது. வங்கிகள் யாருக்குக் கடன் வழங்க வேண்டும் என்று,

எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்கு இதைவிடவும் மேலதிகச் சான்றுகள் வேண்டுமா என்ன?

இந்தக் கடன்களுக்கான சராசரி வட்டி விகிதம் சுமார் 12% ஆக இருக்கிறது. கடன் வழங்கும் வங்கிகளுக்கு, இது மிகவும் கவர்ச்சிகரமான நிகர வட்டி விகிதமாகும். கடன் பெறுபவர்களுக்கும், இது மிகவும் விரும்பத்தக்க மாற்றுக் கடன் முறையாகும். ஊரகப் பகுதிகளின் முறைசாராத கடன்வாய்ப்புகளில் வருடாந்திர வட்டி விகிதங்கள் 100%-க்கும் அதிகமாக உள்ள நிலையில், நுண்கடன் நிறுவனங்களின் செலவுகளுக்கான வருடாந்திர லாப விகிதம் 22-24%-க்குள் மட்டுமே இருக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி ஒழுங்குபடுத்தியுள்ளது.

தீன்தயாள் அந்த்யோதயா யோஜ்னாவின் வாயிலாக மேலதிகக் கடன்களை வழங்குவதற்கு வலுவான காரணங்கள் இருக்கின்றன. ஓராண்டுக் காலத்தில் அளிக்கப்பட்டுவரும் கடன்தொகையை இரண்டு மடங்காக உயர்த்தவும்கூடச் செய்யலாம். ஊரகப் பகுதிகளை நோக்கிய இந்தப் பெருந்திரள் கடன் திட்டங்களைக் கொண்டுசேர்ப்பதில் பொதுத் துறை வங்கிகள் முன்னணியில் நிற்கின்றன.

தீன்தயாள் அந்த்யோதயா யோஜ்னா - தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் வறுமைக்கு ஆளாகியுள்ளதாகக் கண்டறியப்படும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு பெண், சுய உதவிக் குழுக்களின் வலைப்பின்னலுக்குள் மார்ச் 2022-க்கு முன்னதாகக் கொண்டுவரப்பட வேண்டும். தீன்தயாள் அந்த்யோதயா யோஜ்னாவின் கீழ் அளிக்கப்படும் கடன்களில் பெரும்பாலானவை விவசாயம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

கடன்பெறும் பெண்களில் பெரும்பாலானவர்கள் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இந்த நுண்கடன்கள், உழவர் கடன் அட்டைகளைக் காட்டிலும் விவசாய வருமானத்தை மேம்படுத்தும் திறன்கொண்டவை. கரோனா பெருந்தொற்றுக் காலத்திலும்கூட, வேளாண் துறை வளர்ச்சி கண்டுள்ளது. தீன்தயாள் அந்த்யோதயா யோஜ்னாவின் கீழ் சிறு அளவிலான ஊக்கத்தொகைகளை அளிக்கும்பட்சத்தில் (ஓர் ஆண்டு நிறைவுற்ற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.5,000 என்ற அளவில் மூலதன மானியம் அல்லது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வட்டித்தொகையை அரசே செலுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவது போன்று) ஊரகக் குடும்ப வருமானம் இரு மடங்கு அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

# 11. இந்திய அரசின் திட்டம் - பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

மகளிர் அதிகாரத்துக்கான திட்டங்கள்:-

சிறுமிகள் மீதான பாலியல் கொடுமைகள், மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையிலான பிரச்சினைகளுக்குத் முடிவு ஏற்படும் வகையில் பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்போம் (பேடி பச்சாவ், பேடி பதான்) திட்டம்

கருவுற்றிருக்கும் பெண்கள், தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களின் உடல் நலனைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு பண ஊக்கத் தொகை வழங்கும் வகையிலான பிரதம மந்திரி மத்ரு வந்தனா யோஜனா திட்டம்.

11 - 18 வயதிலான வளரும் பருவத்தில் உள்ள பெண் குழந்தைகளின் சமூக அந்தஸ்தை தொழில் முறை பயிற்சி உள்ளிட்டவை மூலம் உயர்த்தும் வகையிலான வளர் பருவ பெண் குழந்தைகள் திட்டம்.

கிராமப்புற பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில், சமூக ரீதியான செயல்பாடுகளில் தன்னார்வத் தொண்டுள்ளம் கொண்ட மாணவிகள் மூலமாக செயல்படுத்தப்பட்டுவரும் பிரதம மந்திர மஹிளா சக்தி கேந்திரா திட்டம்

பணிக்கும் செல்லும் தாய்மார்களின் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு பகல் நேரத்தில் பாதுகாப்பு அளிக்கும் வகையிலான தேசிய மழலையர் பாதுகாப்புத் திட்டம்

ஏழை பெண்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் மேம்பாடு ஏற்படுத்தும் பொருட்டு வாழ்க்கை ஆதரங்கள், வருமானத்தைப் பெருக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலான ராஷ்ட்ரீய மஹிளா கோஷ் திட்டம் ஆதரவற்ற, மன உளைச்சலுக்குள்ளான பெண்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வு அளிக்கும் வகையில் ஸ்வதார் கிரெஹ் திட்டம் பெண்கள் கடத்தப்படுவதை தடுக்கும் வகையிலும், வணிக ரீதியாக கடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்களின் மீட்பு, புனர்வாழ்வு, மீண்டும் ஒன்று சேர்ப்பது, நஷ்ட ஈடு வழங்கும் வகையிலான உஜ்ஜவாலா திட்டம்.

பணிக்குச் செல்லும் மகளிருக்காக பாதுகாப்பான மகளிர் விடுதிகள் திட்டம். இத திட்டத்தின் கீழ் 2 புதிய திட்டங்கள் வரப்பெற்றுள்ள நிலையில் இமாசலப்பிரதேசத்தில் 2 விடுதிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் மருத்துவ உதவி, காவல் உதவி, சட்ட உதவி, மன நல ஆலோசனை, தற்காலிக ஆதரவு ஆகியவற்றை ஒரே இடத்தில் பெறும் வகையில் மகளிருக்கான உதவி மைய தொலைபேசி எண் திட்டம்

**குழந்தைகளுக்கான திட்டம்**

6 வயது வரையிலான குழந்தைகளின் முழுமையான வளர்ச்சி, கருவுற்றிருக்கும், பாலூட்டும் தாய்மார்களின் சத்தான உணவுக்கு வழி வகுக்கும் வகையில் மாநிலம், யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுக்கான சேவை திட்டம்

நகர்ப்புற, புற நகர்ப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உண்டாக்கும் வகையில் மாநில, யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**தேசிய ஊ\ட்டச்சத்து அமைப்பு-**

2017-2018ம் ஆண்டில் தேசிய ஊட்டச்சத்து அமைப்பு அமைக்க இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அமைச்சகங்களுக்கு இடையிலான ஊட்டச்சத்து தொடர்பான விஷயங்களை கவனிக்கும் உயர்நிலை அமைப்பாக தேசிய ஊட்டச்சத்து அமைப்பு விளங்கும்.

மேற்கூறிய தகவல்களை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திரு. விரேந்திர குமார் மாநிலங்களவையில் கேள்விக்கு ஒன்றுக்கு பதில் அளிக்கையில் தெரிவித்தார்.